## அறிமுகம்

1980களில் அறிமுகப்படுத்தப்பட்ட நவ தாராளவாத பொருளாதார அமைப்பு முறையானது, பன்னாட்டு நிறுவனங்கள் எல்லை கடந்து முதலீடு செய்ய வாய்ப்பு அளிக்கும் வகையில் தேசிய அரசுகள் நமது நாடுகளின் தொழிலாளர் சட்டங்களையும், வர்த்தக சட்டங்களையும், தளர்த்த வழிசமைத்தன. இதன் மூலம் பன்னாட்டு கம்பனிகள் எல்லை கடந்து ஏனைய நாடுகளின் உள்ளூர் கம்பனிகளுடன் இணைந்து உற்பத்தியில் ஈடுபட வாய்ப்பேற்பட்டன. இவ்வாறு உற்பத்தியில் ஈடுபட்ட பன்னாட்டு கம்பனிகளினால் தொழிலாளர்களது உரிமைகள் மறுக்கப்பட்டதுடன், சூழல் சூரையாடலும் பாரியளவில் நடைபெறலாயின.

இச்சூரையாடலுக்கெதிராக தொழிற்சங்கங்களும், குடிமைச் சமுதாய அமைப்புகளும் தமது எதிர்ப்பார்ப்பினை தேசியரீதியிலும் சர்வதேசரீதியிலும் முன்வைத்தன.

இதேவேளை நுகர்வோர் பொருட்களை வாங்குவதை தவிர்க்கும் நடவடிக்கைகளை ஊக்குவிப்பதன் மூலம் ஐரோப்பிய நாடுகளின் குடிமைச் சமுதாயம் தமது எதிர்ப்பினைக் காட்டின.இதன் காரணமாக, பன்னாட்டு கம்பனிகள் சுயாதீனமாக தத்தமது கம்பனிகளுக்கென தனியான ஒழுக்கக்கோவைகளை 1990களில் அறிமுகப்படுத்தலாயின. இதேவேளை சர்வதேச தொழிலாளர் சம்மேளனம் "அடிப்படை உரிமைகளும், வேலையின் போது கடைபிடிக்கவேண்டிய கொள்கைகள்" எனும் பிரகடனத்தை 1998ல் பிரகடனப் படுத்தியதுடன் பின்வரும் அடிப்படை உரிமைகளை, தனியார்துறை பின்பற்ற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியது.

1. தொழிற் சங்கங்களை உருவாக்குவதற்கான (ஒன்று சேர்வதற்கான) உரிமை
2. கூட்டுப்பேரம் பேசுதலுக்கான உரிமை.
3. கட்டாய உழைப்பினைக் கோருதலை நிறுத்தல்.



4.சிறுவர் ஊழியத்தைத் தவிர்த்தல்.

5.வேலைத்தளத்தில் பாகுபாட்டினைக் காட்டுதலைத் தவிர்த்தல்

இப்பிரகடனத்தைத் தொடர்ந்து ஐரோப்பாவின் பொருளாதார ஒத்துழைப்பு (OECD) மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச நாடுகளின் அமைப்பு 1976ல் உருவாக்கிய பல்தேசிய நிறுவனங்களுக்கான வழிகாட்டல் கோவையை மறுபரிசீலனை செய்து 2000ல் புதிய வழிகாட்டல் கோவையை வெளியிட்டது.

இவ் வழிகாட்டல் கோவையில், தனியார்துறை நிறுவனங்கள், மனித உரிமைகள், தகவல்களை வெளியிடுதல், ஊழலை ஒழித்தல், தொழில் உறவுகள், சூழல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு, ஐ.எல்.ஓ கட்டளைகள் போன்றவற்றை பின்பற்ற வேண்டும் என்பதை வழியுறுத்தியது.

இது தவிர அரசசார்பற்ற நிறுவனங்களான கிறிஸ்துவ உதவி (Christian Aid), ஒக்ஸ்போம் (Oxfam),அடிமைத்தனத்திற்கு எதிரான அமைப்பு (Anti slavery) தொழிற்சங்க காங்கிரஸ் (Trade Union Congress) சுதந்திர தொழிற்சங்கங்களக்கானசர்வதேச சம்மேளனம்(International Corperation of Free Trade Union)மற்றும் ஆடைத்தொழிலாளர் சர்வதேச சம்மேளனம் (Garment Workers Federation) என்பன ஒன்றிணைந்து விழுமிய வர்த்தக முனைப்பு (Ethical Trade Initiating)-(UK) எனும் அமைப்பினை உருவாக்கி பரப்புரைகளை மேற்கொண்டன. இதுதவிர அமெரிக்காவின் சமூக பொதுக்கூறல் அமைப்பு, பிரித்தானியாவின் AA 1000 வரிசை அமைப்பு, ஐ 150-அமைப்பு, மற்றும் (Clean Cloth) சுத்தமான ஆடை அமைப்பு என்பன பன்னாட்டு கம்பனிகளின் தொழிலாளர் உரிமை மறுப்பு மற்றும் சூழல் சுரண்டல் பற்றி பரப்புரைகளை மேற்கொண்டன.

இவற்றின் விளைவாக 2000ம் ஆண்டு நவம்பர் மாதம் ஐரோப்பிய வர்த்தக நிறுவனங்களினால் தனியார் சமூகப் கடப்பாடு எனும் கோவை வெளியிடப்பட்டது. இக்கோவை வெளியீட்டின் போது 600 கம்பனிகளின் பிரதிநிதிகள் பங்கு கொண்டனர்.இதேவேளை தனியார் சமூக கடப்பாட்டினை வலியுறுத்தும் வகையில் ஐக்கிய நாடுகளின் செயலாளர் கொப்பி அனான் "உலக உள்ளடக்கம்" (Global Compact) எனும் பிரகடனத்தை வர்த்தகத் துறைக்காக வெளியிட்டார். இப்பிரகடனம் ஐ.எல்.ஓ வின் பிரகடனங்களை வலியுறுத்தியதுடன், தனியார்துறை அதனைப் பின்பற்ற வேண்டுமெனக் கூறியது.

இதன் பின்னர் தனியார் சமூகக்கடப்பாடு (Corporate Social Responsibility) வர்த்தகத் துறையில் பிரபல்யமடைந்ததுடன் பன்னாட்டு கம்பனிகள் மட்டுமல்லாது பன்னாட்டுக் கம்பனிகளுடன் கூட்டிணைந்துள்ள உள்நாட்டு தேசியக் கம்பனிகள் மத்தியிலும் பிரபல்யமடைந்தது.

இப்பின்புலத்தில் இலங்கை தனியார் சமூக கடப்பாட்டு நடவடிக்கைகளைப்பற்றி நெதர்லாந்து **SOMO** அமைப்பின் உதவியுடன் சமூக அபிவிருத்தி நிறுவகம் (**ISD**) 2009இல் ஆய்வொன்றினை மேற்கொண்டது. அவ் ஆய்வின் வெளிப்பாடாக இலங்கையின் தொழிற்சங்கங்கள் மற்றும் குடிமைசார் (சிவில்) அமைப்புகள் மத்தியில் தனியார் சமூக கடப்பாடு (**CSR**) தொடர்பாக கலந்துரையாடல் சிலவற்றினை சமூக அபிவிருத்தி நிறுவகம் நடாத்தியது. த.ச.க (**CSR**) வினைப் பற்றி அறிந்துக் கொள்ளல் மற்றும் தனியார் சமூக கடப்பாடு பற்றி எவ்வாறான நிலைப்பாட்டினை குடிமை சமுதாயம் மேற்கொள்வது என்பது இதன் குறிக்கோளாக அமைந்தது.

இக்கலந்துரையாடல்கள் உயர்மட்ட தொழிற்சங்க தலைவர்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் தலைவர்களை மையமாகக் கொண்டது. இக்கலந்துரையாடல்களின் போது த.ச.க எவற்றினை மையமாகக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதனை பங்குபற்றுனர் வலியுறுத்தினர். அவ்வாறு முன்வைக்கப்ட்ட கருத்துக்கள் இங்கு குடிமை சமுதாய எதிர்ப்பார்ப்புகளாக முன்வைக்கப்படுகின்றது.

பெ.முத்துலிங்கம்
இயக்குனர்,
சமூக அபிவிருத்தி நிறுவகம்,



**தனியார் சமூகக் கடப்பாடு பற்றிய வரைவிலக்கணம்.**

தனியார் சமூக கடப்பாடு பற்றி பல வரைவிலக்கணங்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும் டச் சி.எஸ்.ஆர். மேடை(Dutch C.S.R Flatform) எனும் அமைப்பு பின்வரும் வரைவிலக்கணத்தை வெளியிட்டுள்ளது.

“தனியார் சமூக கடப்பாடென்பது கம்பனிகள் தமது முழுமையான வழங்கல் சங்கிலிமுறையின் போது உருவாகும் சமூக, சூழல், மற்றும் பொருளாதார விளைவுகளின் பயனாக ஏற்படும் விளைவுகள் பற்றிய தகவல்களை வெளியிடுவதுடன், பொறுப்பினை ஏற்று, பங்காளிகளுடன் (Stakeholders) ஆக்கபூர்வமாக இணைந்து செயற்படுவதாகும்” என விளக்கியுள்ளது.

இதேவேளை ஐரோப்பிய தொழிற்சங்க சம்மேளனம் (ETUC), “தனியார் துறை சமூகக் கடப்பாடு என்பது, சமூக, சூழல், மற்றும் கூட்டுப் பேரம் பேசுதல் என்பவை தொடர்பான சட்டங்களை மாற்றுவதாக அமையக்கூடாது. மாறாக சி.எஸ்.ஆர். அவற்றிற்கு துணை சேர்ப்பதாக அமைய வேண்டும்” எனக்கூறியுள்ளது.

**இலங்கை கம்பனிகளின் தனியார் சமூகக்கடப்பாடு.**

இலங்கை வர்த்தக சம்மேளனம் (Chamber of Commerce)2003 முதல் தனியார் சமூகக் கடப்பாடு நடவடிக்கைகளை ஊக்குவித்து வருவதுடன்,வருடாந்த பரிசளிப்பு நிகழ்வொன்றினையும் நடாத்தி வருகின்றது. ஒவ்வொரு வருடமும் 10 கம்பனிகளுக்கு சிறந்த தனியார் சமூகக்கடப்பாட்டு நடவடிக்கைகளுக்காக பரிசில்களை வழங்கி வருகின்றன.

இதேவேளை இலங்கை தொழிலாளர் சம்மேளனம் 2004இல் (Ceylon Employees Federation) “தனியார் சமூகக்கடப்பாடு விடயங்கள் பிரச்சினைகள் ,சவால்கள்” எனும் தலைப்பிலான நூலொன்றையும் வெளியிட்டது.தனியார் கம்பனிகள் எவ்வாறான சமூகக்கடப்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்பதனை இந்நூல் விளக்குகின்றது.

தனியார் கம்பனிகள் CSR தொடர்பில் தெளிவான மூல உபாயத்தையும. அதேவேளை சமூகப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக கம்பனிகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் பற்றி மக்களுக்கு அறிவூட்டலை மேற்கொள்ள வேண்டும் என இந்நூல் கேட்டுக் கொண்டுள்ளது.



**இலங்கை நிறுவனங்களின் சமூகக் கடப்பாடு நடவடிக்கைகள்.**

சமூகக் கடப்பாடு என்பது கம்பனிகள் தருமச் செயற்பாடகளை மேற்கொள்வது அல்ல. மாறாக கம்பனிகள் நாட்டில் நிலவும் தொழிற்சட்டங்கள், சூழல் மற்றும் மனித உரிமைகளை பேணும் நடவடிக்கைகளை மேற்கொள்வதே தனியார் சமூகக்கடப்பாடு என சர்வதேச பொருத்தனைகளும், பிரகடனங்களும், கூறுகின்றன. ஆனால் இலங்கையின் நிறுவனங்கள் தரும நடவடிக்கைகளிலேயே ஈடுபடுவதுடன் அதனையே இலங்கை வர்த்தக சம்மேளனமும் ஊக்குவிக்கின்றது

இலங்கையின் ஆடைத்தொழிற்சாலைத் தொழிலில் ஈடுபட்டுள்ள பல கம்பனிகள் பல தரும நடவடிக்கைகளில் (பாடசாலைகளுக்கு உபகரணங்கள் வழங்குதல், சமய நிறவனங்களுக்கு கட்டிடங்கள் வழங்குதல்) ஈடுபடுகின்றன. இச்செயற்பாடானது,சி.எஸ்.ஆரின் கோட்பாட்டினை முழமையாக பின்பற்றுவதாக அமையவில்லை. இதேபோல் தோட்ட மற்றும் பிற கம்பனிகளும் இவ் தரும நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றன.

**இலங்கையின் சி.எஸ்.ஆர். எவ்வாறானதாக அமைய வேண்டும்.**

**தொழில் உரிமை விடயத்தில்**

**சமூகக் கடப்பாட்டினை பின்பற்றுவதாகக் கூறும் நிறுவனங்கள் (கம்பனிகள்)**

•தொழில் உரிமை விடயத்தில் ஐ.எல்.ஓ வின் பிரகடனங்களை பின்பற்றுவதுடன்,

1.ஒன்று சேர்வதற்கான உரிமையை அங்கீகரித்தல்.

2.நியாயமான சம்பளத்தைப் பெறுதலை அங்கீகரித்தல்.

3.மனித உரிமை தொடர்பான சர்வதேச சமவாயங்களை மதித்தல்.

என்பனவற்றைப் பின்பற்றல் வேண்டும்.

• **ஐ.எல்.ஓ வின் பிரகடனங்களான,**

*ஸ்தாபன மயமாவதற்கும்,கூட்டுப்பேரம் பேசலுக்கான உரிமையை பின்பற்றல் (ILO Conventions 87-98)

*கட்டாய ஊழியத்தை ஒழித்தல். (ILO Convention 29-105)

*சிறுவர் ஊழியத்தை தடுத்தல் (ILO Conventions -182)

*தொழிற்சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு (ILO Convention 155)

*தொழிற்பாதுகாப்பை உத்தரவாதப் படுத்தல் (ILO Tripartite declaration) வாழ்வதற்கான சம்பளம் (ILO Convention 26-131)

*ஆகக் கூடிய வேலை நேர மணித்தியாலம் (ILO Convention -01)

*வாழ்வதற்கான சம்பளம் (ILO Convention 26-13)

*குறைந்தபட்ச வேதனம் (ILO Convention-131)

*தொழிலின் போது பாகுபாடு காட்டாமை (ILO Conventon-111)

*சம சம்பளம்

! (ILO Convention-100)

*சமூக பாதுகாப்பு

! (ILO Convention-102)

*சம்பளத்தைப் பாதுகாத்தல் (ILO Convention-95)

என்பனவற்றினை கம்பனிகள் பின்பற்றுதல் வேண்டும்.



இது தவிர நாட்டில் நடைமுறையிலுள்ள அனைத்து தொழிலாளர் சட்டங்களையும் மீறாத வகையில் செயல் படுவதுன் தொழிலாளா(ஒன்று சேரும்) தொழிற் சங்கம் உருவாக்க இடமளிக்க வேண்டும்.

மேலும் நாட்டின் தொழில் மற்றும் சமூக பாதுகாப்பு சட்டங்களான,

1. சம்பள நிர்ணய கட்டளைச் சட்டம்
Wages Boards Ordinance

2. கடை பணிமனைச் சட்டம்
Shop and office Employee"s Act

3.பெண்களை சுரங்க வேலையில் ஈடுபடுத்தும் சட்டம்
Employment of Females in mines Act

4. மகப்பேற்றுச் சட்டம்
Maternity Benefits Ordinance

5.பெண்கள், இளைஞர் மற்றும் சிறுவர் வேலைக்கமர்த்தும் சட்டம்
Employment of Women, Young person's and Children Act

6.தொழிற்சாலை சட்டம்
Factory Ordinance

7.தொழிலாளர் நட்ட ஈட்டுச் சட்டம்
Workmen's Compensation Ordinance

8.ஊழியர் நம்பிக்கை நிதியம்
Employees Provident Fund Act

9.சேவைக்கால கொடுப்பனவுச்சட்டம்
Payment of Gratuity Act

10.தொழிற் பிணக்குச் சட்டம்
Industrial Disputes Act

11.தொழிலில் இருந்து நீக்கும் சட்டம்
Termination of Employment of workmen Act

12.தோட்டத் தொழிலாளர் சட்டம்
Estate Labour (Indian) Ordinance

13.குறைந்தபட்ச வேதனம் (தோட்டத் தொழிலாளர்) கட்டளைச்சட்டம்
Minimum wages (Indian Labour) Ordinance

14.தொழிற்சங்க கட்டளைச்சட்டம்
Trade Unions Ordinance

என்பனவற்றினை பின்பற்ற வேண்டும்.

• **மனித உரிமை விடயத்தில்**

*நிறுவனங்கள் சர்வதேச ரீதியாகப் பிரகடனப்படுத்தப்பட்ட மனித உரிமையைப் பேணிப்பாதுகாக்கும் வகையில் செயற்படுத்தலும் மற்றும் மனித உரிமையை மீறாத வகையில் செயற்படுதல் வேண்டும்.

*இலங்கை அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை மனித உரிமைகளை கடைப்பிடித்தல் வேண்டும்.

*தேசிய இறைமையை மதிக்க வேண்டும்.

*மனித உரிமை மீறல்களில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஈடுபடுவதை, மனித உரிமை மீறல்களை நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஆதரிப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். 07

• **சூழல் தொடர்பில்**

உலக உள்ளடக்கம் (GlobalCompact) பிரகடனப்படுத்திய பிரகடனங்களான.

*நாட்டின் பாதுகாப்புச் சட்டத்தினை மீறலாகாது.

*சூழல் சம்பந்தமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

*பாரிய சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

*அபிவிருத்திக்கான சிநேகமான தொழில்நுட்பங்களை பிரயோகித்தல் விடயங்களைப் பின்பற்ற வேண்டும்.

*தடுப்புச் செயற்பாடுகளின் விழுமியங்களை பின்பற்றல்.

*முற்காப்பு விழுமியங்களை பின்பற்றல்.

*மாசுபடுதலின் விளைவாக ஏற்படும் இழப்புக்களுக்கு இழப்பீட்டு விழுமியங்களை பின்பற்றல்

*நாட்டின் சூழல் பாதுகாப்பு சட்டத்தைப் பின்பற்றல்.



**நுகர்வோர் உரிமைகள்:**

1.நிறுவனங்கள் சந்தைப்படுத்தும், விளம்பரம் செய்யும் பொருட்கள் சேவைகள் தரப்பாதுகாப்பு விடயங்களில் நுகர்வோருடன் உண்மையாக நடந்துகொள்ள வேண்டும்.

2.நாட்டின் அனைத்து மொழிகளிலும் பொருட்களின் விளக்கங்களை தரல் வேண்டும்.

3.நாட்டின் நுகர்வோர் சட்டத்தை பின்பற்றல் வேண்டும்.

4.கம்பனிகளின் உற்பத்திப் பொருட்கள் நுகர்வோரின் உடல் நலம் மற்றும் பாதுகாப்பிற்கு ஊறு விளைவிக்காதிருப்பதனை உறுதி செய்ய வேண்டும்.

**வெளிப்படைத் தன்மையும் அறிக்கையிடுதலும்:**

நிறுவனக் கொள்கைகளும் அறிக்கைகளும் வெளிப்படைத் தன்மைகளை கொண்டிருக்க வேண்டும். பிரதான வெளிப்படைத் தன்மை, அறிக்கை சமர்ப்பித்தல் விழுமியங்கள் பின்வருமாறு இருப்பதுடன் அதனை குடிமக்கள் தெரிந்துக் கொள்ளும் மொழியில் பிரசுரிக்க வேண்டும்.

• அறிக்கைகள் ஏற்புடையனவாக, தெளிவானவைகளாக,சரியானவைகளாக, முழுமையானவைகளாக,சார்புத்தன்மை அற்றவைகளாக இருத்தல் வேண்டும். மேலும் போதிய விளக்கங்களுடன் கால நிலைக்கு ஏற்புடையதாகவும் மானிய, விநியோகிப்பாளர்கள் போன்ற ஏனைய இணை நிறுவனங்களுக்கு ஏற்புடையனவாகவும் இருத்தல் வேண்டும். அதேபோன்று காலோசிதமானவைகளாக அமைதல் வேண்டும்.

- மக்களுக்கு அளிக்கப்படும் வர்த்தக-தர அடையாளம் தொடர்பான பின்னணித் தகவல்கள் பிரதிபலிக்கப்பட வேண்டும்.

- தரவு, ஆலோசனை முறைகளை வெளிப்படுத்த வேண்டும்.

- உற்பத்தி பொருட்களின் பலம் மற்றும் வழிமுறைகள் தொடர்பான தகவல் களை நுகர்வோருக்கு அளிக்கக் கூடியதாகவிருத்தல் வேண்டும்.

**முறைப்பாட்டு வழிமுறைகள்:**

தனியார் சமூக கடப்பாட்டுக் கொள்கை தர மீறல்கள் தொடர்பாக முறைப்பாடுகளை செய்ய தொழிலாளர் களுக்கும், நுகர்வோருக்கும் பங்காளர் களுக்கும் வாய்ப்பு அளிக்கும் முறையை ஏற்படுத்த வேண்டும். நிறுவன இயக்கம் தொடர்பாக முறைப்பாடு ஒன்றை செய்யும் ஊழியர் ஒருவரை கம்பனிகள் ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு, தொழில் நிறுத்தத்திற்கு, பழிவாங்கலுக்கு உட்படுத்தப்படக் கூடாது. நிறுவனங்கள் தொழிலாளர், நுகர்வோர் போன்ற பங்காளர்களின் முறைப்பாடுகளை கையாள்வதற்கு ஆக்கப்பூர்வமான-வெளிப்படைத்தன்மைகளைக் கொண்ட வழிமுறைகளை கொண்டிருப்பதுடன் தேவையற்ற செலவுகளை, குற்றச் சாட்டுகளை, தடைகளை, கருத்து முரண்பாடுகளை, விரைவாகவும் நியாயமாகவும் தீர்ப்பதில் ஒத்துழைக்க வேண்டும்.

CSR

Let Us Work for Social Change ISD

# தனியார் சமூகக் கடப்பாடு விளக்கச்சட்டகம்



ISBN 955-9391-12-8

சமூக அபிவிருத்தி நிறுவகம்,
இல.37, போதியங்கன மாவத்த,
கண்டி.
Institute of Social Development
No.37, Bodhiyangana Mawatha,
Kandy,
Sri Lanka
Tel/Fax: 0094 81 2202923
Tel: 0094 81 3841273
email: kandyisd@sltnet.lk